Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, MAY 28, 2021

வெள்ளிக்கிழமை மே 28, 2021 | ஒளி: 06 கதிர்: 07 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ Free

# ‘பட்டினியால் சாகப் போகிறோம்’





## முல்லைத்தீவு மக்கள் அழுது புலம்பினர்

■ சண்முகம் தவசீலன்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணிக்கப் போகின்றோமோ இல்லையோ, உணவுக்கு வழியின்றி, பட்டினி கிடந்து, வெகுவிரைவில் சாகப் போகின்றோம் என முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிபவர்களுக்கு ஏற்பட்ட கொரோனா கொத்தணியில் பலருக்கு தொற்று இனங்காணப்பட்டது. இதன் காரணமாக புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுகள் கடந்த 17ஆம் திகதியன்று முடக்கப்பட்டன. இருப்பினும் கடுமையான பாதிப்புகள் இருந்த 11 கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த 21ஆம் திகதியன்று விடுவிக்கப்பட்டன. எனினும், பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளாந்த கூலித்தொழிலை நம்பிவாழும் பல குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# ‘உண்ணுங்கள் அச்சமின்றி; கடலுணவை உண்ணுங்கள்’

கொழும்புத் துறைமுகத்துக்கு இரசாயனப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை ஏற்றிவந்த சரக்குக் கப்பலில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக உயிரினங்களுக்கு கேடு ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் கடலில் கலந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படாமலும் கடலுணவுகளை உட்கொள்வதற்குத் தயங்கத் தேவையில்லை எனவும் கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

கடலுணவுகளை உட்கொள்வதற்கு மக்கள்



தொடர்ச்சி P2

## கொரோனா மரணமா, இல்லையா?

# இனங்காண விதிகள் முன்வைப்பு

மரணங்களை கொரோனா தொற்றால் ஏற்படும் மரணங்களா என்பதை உறுதிப்படுத்துவது தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால், சகல வைத்தியர்களுக்கும் விசேட சுற்றுநிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொரோனா தொற்றால் உயிரிழக்கும் நபர்களை உறுதிப்படுத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள அச்சுற்றுநிருபத்தில், வைத்தியர்கள் கடைபிடிக்க வேண்டிய பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாராவது ஒருவர் கொரோனா தொற்றுக்குரிய அடையாளத்துடன் உயிரிழந்தார் என்பதை மருத்துவ ரீதியாக உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால நோய்க்கு உள்ளான ஒருவர் உயிரிழந்தால், அவருக்கு

தொடர்ச்சி P2

# கிழக்கு செயலணிக்கு அனஸ் அஹமட் நியமனம்



கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பதின், கொவிட் - 19 கிழக்கு செயலணியில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அனஸ் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 24 மணித்தியாலங்களும் செயற்படும் வகையில் ஏழு பேரைக் கொண்ட விசேட கொவிட்-19 கிழக்கு செயலணியொன்று, ஆளுநரால்

தொடர்ச்சி P2

# போர்ட் சிட்டி சட்டமானது

பாராளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதியன்று, மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் (போர்ட் சிட்டி)



தொடர்ச்சி P2

# ‘ஆபத்தை வாங்கிய போர்ட் சிட்டி’

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை (போர்ட் சிட்டி) நிறைவேற்றிக்கொள்வதற்காக, பாராளுமன்றம் கூட்டப்பட்டமையால், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எம்.பிக்கள் சிலருக்கும், பணியாளர்கள் பலருக்கும் கொரோனா

தொடர்ச்சி P2

# ‘வேண்டுமென்றே செய்யவில்லை’

பொது இடத்தில் முகக் கவசத்தை அணியாத குற்றத்துக்காக தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அளுத்கம - தர்கா நகரைச் சேர்ந்த நபருக்கு களுத்துறை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## சரக்குக் கப்பல் கரும்புகையை கக்கிகொண்டிருப்பதால்

# ‘அமில மழை பெய்யும் அபாயம்’

### கப்பல் கடலுக்குள் மூழ்கும் அபாயம்

### மொய்த்தவர்களில் எண்மர் கைது



தீ பரவியிருக்கும் எம்வீ எக்ஸ் - பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் கரும்புகையால், அமில மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவென கடல் மாசுபடுவதை தடுப்பதற்கான அதிகார சபை தெரிவித்துள்ளது.

தீ பரவிக்கொண்டிருக்கும் கப்பலிலிருந்து நைட்ரஜன் டை ஒக்சைட் வாயு வெளியேறுவதால், அது காற்றுடன் கலந்து அமில மழையாகப் பெய்யும் வாய்ப்புள்ளதாக அவ்வதிகார சபையின் தலைவி தர்ஷனி லஹதபுர

தொடர்ச்சி P2

# கொடுப்பனவு பெறுவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள், இன்றும் நாளையும் தபாலகங்கள் மற்றும் உப- தபாலகங்களுக்குச் சென்று, தங்களுடைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்றும் (28) நாளையும் காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை அவை திறந்திருக்கும் என்றும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# முக்கியமான பல நிறுவனங்கள்

## அத்தியாவசிய சேவைகளாகின

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் பல அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளன. அதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையொப்பத்துடன், நேற்று (27) வெளியிடப்பட்டது.

துறைமுகம், எரிபொருள், பொதுப்போக்குவரத்து, மத்தியவங்கி, அரச வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்கள், சேவைகள்,கிராம சேவகர்கள் உள்ளிட்ட பதவிநிலையிலிருக்கும் அதிகாரிகளின் சேவைகள் உள்ளிட்டவையே அத்தியாவசிய சேவைகளாக

தொடர்ச்சி P2

# ‘தடுப்பூசி கிடைக்காதென அச்சம் கொள்ளாதீர்கள்’

■ சேன் செனவிரத்ன

கொரோனா தடுப்பூசி செயற்றிட்டத்தை இலங்கையிலுள்ள சகல கிராமங்களுக்கும் கொண்டு செல்வதாகத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, எனவே தமக்கு தடுப்பூசி கிடைக்காதென எவரும் வீண் அச்சத்தை ஏற்படுத்திகொள்ள வேண்டாம் என்றார்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற கொரோனா ஒழிப்பு தொடர்பான குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தற்போது சுகாதார அமைச்சால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு தடுப்பூசிகளை விநியோகிக்கும் நடவடிக்கை



தொடர்ச்சி P2

# ஐ.தே.கவின் முன்னாள் பெண் உறுப்பினர் கைது





ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகன உதிரிப்பாகங்களில் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழே, இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## கொரோனாக்கள் உருமாறிவிட்டதால்

# ‘தடுப்பு மருந்து தயாரித்தல் சிறந்ததொரு நகர்வாகும்’

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு இரண்டாம் தலைமுறை, தடுப்பூசி மருந்தை கண்டறியவேண்டிய தேவை ஏற்படலாமெனத் தெரிவித்துள்ள ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு, மூலக்கூறு மருத்துவத் துறையின் பணிப்பாளரான வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர, தடுப்பு மருந்தை உள்ளூரில் தயாரித்தால் அதுவே சிறந்ததொரு நகர்வாகும்.

கொரோனா வைரஸ் உருமாறி, பிரித்தானியா,



இந்தியா, பிரேஸில், இத்தாலி போன்ற வைரஸுகளாக மாறி பரவிக்கொண்டுள்ளன. இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்தை கண்டறிவதே உசிதமானது என்றார்.

கொவிட் -19 குடும்பத்தை சேர்ந்த 70 வகையான வைரஸ்கள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘பட்டினியால் சாகப் போகிறோம்’

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி முதல் திடீரென எந்த அறிவித்தலுமின்றி முடக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பில் 9 கிராம அலுவலர் பிரிவுகளிலும் முள்ளியவளையில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் இன்றி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து முடக்கப்பட்ட நிலையிலிருக்கும் புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டார மக்கள், தாம் கொரோனாவால் இறக்கிறோமோ இல்லையோ உணவின்றி இறக்கப்போகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இன்றுவரை எந்த உலருணவு பொருள்களும் கிடைக்கவில்லை. தமது பகுதியிலுள்ள சிலர், தமக்கு பிடித்தவர்களுக்கு மாத்திரம் வெளிநாடுகளில் இருந்து வரும் நிதிகள் மூலம் உதவுவுகின்றனர்.

அவ்வாறான உதவிகளை, பாதிக்கப்பட்டுள்ளவர்களை முன்னிலைப்படுத்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி முடக்கநிலையிலும் தமது கிராமத்தில் ஒன்றுகூடி, நேற்று (27) எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில், அங்கு வந்த பிரதேச செயலக அதிகாரிகள், அவ்வாறான சம்பவங்கள் இனி நடக்கவிடாது பார்ப்பதாகவும் உரிய வகையில் உதவித்திட்டங்களைப் பெற்றுத்தர ஆவண செய்வதாகவும் தெரிவித்தனர். அதனையடுத்தே, அங்கிருந்து மக்கள் கலைந்து சென்றனர்.

# கொடுப்பனவு பெறுவோருக்கு...

தபாலகங்கள் ஊடாக வழங்கப்படும், 2021ஆம் ஆண்டு மே மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு, விவசாயி/ மீனவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு மற்றும் பொதுமக்கள் நிவாரண கொடுப்பனவுகளே வழங்கப்படவுள்ளன.

கொரோனா ஒழிப்பு தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் அனுமதியுடன் குறித்த கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள வருகை தருபவர்கள் தமது ஓய்வூதிய அடையாள அட்டை,விவசாய/ மீனவ ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் கொடுப்பனவுகளுக்காக விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளுடன் தபாலகங்களுக்கு வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினை காரணமாக சில அலுவலகங்கள் திறக்கப்படாத சந்தர்ப்பத்தில் 1950 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# ‘உண்ணுங்கள் அச்சமின்றி கடலுணவை உண்ணுங்கள்’

தயங்கத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கப்பல் விபத்துக்குள்ளான கொழும்பு, கம்பஹா மாவட்ட கடல் பிரதேசத்தில் மீன்பிடி செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தால் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை. எவ்வாறெனினும், கப்பலில் விபத்துக்குள்ளான நேரத்திலிருந்து சம்பந்தப்பட்ட கடல் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடலில் கலந்திருக்கக் கூடிய பதார்த்தங்கள் தொடர்பாகவும், அவற்றால் உருவாகக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் கண்டறிவதற்கான ஆய்வுகளில் ‘நாரா’ எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அதேவேளை, பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியிலும் நாடளாவிய ரீதியில் கடலுணவுசார் போக்குவரத்துகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள மீன் சந்தைகளில் கொழும்பு, கம்பஹா போன்ற சந்தேகத்துக்கிடமான கடல் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட கடலுணவுகளே விற்பனை செய்யப்படுகின்றன. ஆகையால், அவற்றை உட்கொள்வது தொடர்பாக மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# இனங்காண விதிகள்...

கொரோனா தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டாலும் அந்த மரணத்தை தனியாக கணக்கிட்டு, அவரது மருத்துவ அறிக்கையை பரிசோதித்தன் பின்னர் உறுதிப்படுத்தவேண்டும்.

அதுவும், கொரோனா தொற்றே அவரது மரணத்துக்கு பிரதான காரணமென உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அம்மரணத்தை கொரோனா மரணமாக உறுதிப்படுத்த வேண்டுமென, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றின் இறப்பை உறுதிப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை கடைபிடிப்பதுடன், அவரது இறப்புச் சான்றிதழில் அது கொரோனா மரணம் என குறிப்பிடுவது அவசியமாகும்.

சிலரது மரணத்தின் பின்னர் முன்னெடுக்கப்படும் பி.சிஆர் பரிசோதனையின் போது, சம்பந்தப்பட்ட நபர் கொரோனா தொற்றுக்குள்ளானவர் என அடையாளப்படுத்தப்பட்டு, அவரது இறப்புக்கு கொரோனாவே பிரதான காரணமாக பிரேத பரிசோதனையின் போது உறுதிப்படுத்துவது தொடர்பில் உரிய பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டும் என்றும் அந்த சுற்றுநிரூபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முக்கியமான...

பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரமே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது,

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, மக்களுக்கு ஆகக் கூடிய சேவைகளை வழங்கும் வகையிலேயே, மேலே குறிப்பிட்ட சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசி தங்களுக்கு கிடைக்கவில்லையென்றும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாடளாவிய ரீதியிலுள்ள சகல கிராம சேவகர்களும், கடந்த 26ஆம் திகதி முதல் சட்டப்படி வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போர்ட் சிட்டி சட்டமானது

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன், கையொப்பமிட்டுள்ளார்.

இதன்படி, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டம் நேற்று (27) முதல் நடைமுறைக்கு வந்தது. உயர்நீதிமன்றத்தால் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சட்டமூலம், உயர்நீதிமன்ற வியாக்கியானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அன்றையதினம், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு திருத்தத்தையும் அரசாங்கம் உள்வாங்கவில்லை. அதன்பின்னரான மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், ஆதரவாக 149 வாக்குகளும் எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தச் சட்டமூலத்துக்கு, எதிரணியிலிருந்து ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம் மற்றும் இஷாக் ரஹ்மான் ஆகிய இரண்டு எம்.பிக்களும் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘தடுப்பூசி கிடைக்காதென ...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், தமக்கான சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையுடன் இருக்க வேண்டும். இல்லையாயின் வைத்தியர்களால் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் போகும் என்றார்.

கொவிட் குழு மற்றும் வைத்தியர்கள் இணைந்து தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய, சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாக 5 மில்லியன் தடுப்பூசிகள் கிடைத்துள்ளது எனத் தெரிவித்த அவர், கண்டி மாவட்டத்தில் இந்த வார இறுதியில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றார்.

எனவே, தடுப்பூசி யாருக்கு, எங்கே என்பதை தீர்மானிப்பவர்கள் வைத்தியர்கள் என்றும் நாம் அதற்கு தேவையான பின்னணியை உருவாக்குதல் மற்றும் அதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகும். இந்த நடவடிக்கை தனது அமைச்சுக்குரியது அல்ல என்றாலும் அதற்கான ஒத்துழைப்பை வழங்கவே கண்டிக்கு வருகைத் தந்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இதன்போது கிரிக்கெட் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், எமது கிரிக்கெட் மைதானங்களுக்கு புதிய வீரர்கள் பலரை களமிறக்கியுள்ளோம். போட்டியில் தோல்வியடைகின்றமை தொடர்பில் எமக்கு வேதனையுள்ளது. எனினும் அவர்களுக்கும் ஒரு காலத்தை வழங்க வேண்டும். அதேபோல் வீரர்களும் தமக்கு கிடைத்த வாய்ப்புகளை பிரயோசனப்படுத்தி கொள்ள வேண்டும் என்றார்.

# கிழக்கு செயலணிக்கு அனஸ் அஹமட் நியமனம்

நியமிக்கப்பட்டது.

கொவிட் -19 இடர்நிலை தொடர்பில் பொதுமக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், கருத்துகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையிலேயே, இந்தச் செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

இதில், முஸ்லிம் பிரதிநிதியொருவர் உள்ளடக்கப்படாமை தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் புதன்கிழமை (26) ஊடக அறிக்கையொன்றை



வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத், நேற்று (27) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, அனஸ் அஹமட் நியமிக்கப்பட்டமை தொடர்பில் தெரிவித்தார்.

# ‘ஆபத்தை வாங்கிய ...

வைரஸ் தொற்றியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

“பாராளுமன்றத்தைக் கடந்த 18ஆம் திகதி முதல் கூட்டியதாலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கொரோனா தொற்றியுள்ளது” எனத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்றத்துக்கு வெளியிலிருந்து சஜித்துக்கு கொரோனா தொற்றியிருக்க வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

“எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று எங்கிருந்து ஏற்பட்டதென்பது தொடர்பான மருத்துவப் பகுப்பாய்வுகள் எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை” என படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் காரியாலயத்தில் ஒரு மாதத்துக்கு முன்பே கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் காணப்பட்டனர். எனவே, இவர்களிடமிருந்து சஜித்துக்குக் கொரோனா வைரஸ் தொற்றியிருக்க வாய்ப்பில்லை. இந்த ஊழியர்கள் வீட்டிலிருந்தே வேலைகளை செய்ததால், அவர்களிடமிருந்து சஜித்துக்கு கொரோனா தொற்றியிருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.கவின் முன்னாள்...

“56 வயதான சந்தேகநபரை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்” என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

உள்ளூர் சட்டங்களை மீறி சந்தேகநபர் வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து இலங்கையில், ஒரு வாகனத்தை தயாரித்ததாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல்கள் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையில் அந்த வாகனத்துக்கான எந்தவொரு சட்டபூர்வமான ஆவணங்களும் இல்லையெனத் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# ‘அமில மழை பெய்யும்...

தெரிவித்துள்ளார்.

கரையோரங்களில் மாத்திரமன்றி, கரையோரங்களை அண்மித்த பிரதேசங்களிலும் அமில மழை பெய்யக்கூடும். ஆகையால், மழை பெய்யும் போது, வீடுகளிலிருந்து வெளியேறுதல், நனைதல் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, வீடுகளுக்கு வெளியில் வாகனங்கள் உள்ளிட்ட உலோகப் பொருள்கள் இருக்குமாயின் அவற்றை, கடுமையான பாதுகாப்புடன் மூடி வைக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வத்தளை கரையோரத்திலிருந்து மாரவில வரையான கடற்கரையோரங்களில் கடல்நீர் மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, பயணக் கட்டுப்பாடுகளை மீறி, கரையோரங்களில் பொருள்கள் அள்ளிக்குவித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில், எண்மர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவின் ஹசீரா துறைமுகத்திலிருந்து பயணித்த எம்வீ எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல், கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டிருந்த போதே கப்பலில், வியாழக்கிழமை (20) தீ பரவ ஆரம்பித்தது.

சிங்கப்பூர் கொடியுடன் பயணித்த இந்தக் கப்பலில் தீ பரவும் போது, 25 தொன் எத்தனோல், இரசாயனப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள் அடங்கிய 1,486 கொள்கலன்கள் இருந்தன.

சீரற்ற வானிலை மற்றும் கப்பலில் இரசாயனப் பொருட்கள் இருந்தமையால் தீயைக் கட்டுப்படுத்த முடியாது போனதுடன், கப்பலும் முழுமையாக தீக்கிரையானது.

எம்வீ எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் தீ சம்பவத்தால் கொழும்புத் துறைமுக நடவடிக்கைகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று, துறைமுக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# ‘வேண்டுமென்றே

நாட்டில் அமுலிலுள்ள பயணக்கட்டுப்பாடு, தளர்த்தப்பட்டிருந்த போது, பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சிலர் வீல்பரோக்களுடன் கடைகளுக்கு சென்றிருந்தனர். தர்கா நகரைச் சேர்ந்த நபரும் வீல்பரோவில் பொருள்களைக் கொள்வனவு செய்து, வீடு திரும்பிய வீடியோக் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன. குறித்த நபர், முகக் கவசம் அணியவில்லை என்பதற்காக கைது செய்த பொலிஸார், களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இவர்சார்பில் ஆஜரான சட்டத்தரணி “வேண்டுமென்றே தவறை செய்யவில்லை. முகக் கவசம் அணியாது இந்த நபர் பொருள்களைக் கொள்வனவு செய்ய செல்லவில்லை என தெரிவித்தார்.

# ‘தடுப்பு மருந்து...

தடுப்பூசிகளாகும்” என்றார்.

கொரோனா வைரஸ் உருமாறி, பிரித்தானியா, இந்தியா, பிரேஸில், இத்தாலி போன்ற வைரஸுகளாக மாறி பரவிக்கொண்டுள்ளன எனத் தெரிவித்த அவர், ஆகையால் இரண்டாம் தலைமுறை தடுப்பு மருந்தை கண்டறிவதே உசித்தமானது என்றார்.

கொவிட் -19 குடும்பத்தை சேர்ந்த 70 வகையான வைரஸ்கள் பரவிக்கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறு இருக்கையில் சீன வைரஸைக் கட்டுப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் மூலமாக ஏனைய வைரஸ்களை கட்டுபடுத்த முடியுமா? என்றும் வினவினார்.

இலங்கையில் தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய முடியுமெனில் அது மிகச்சிறந்த நகர்வாகும் என்றும் தெரிவித்த அவர், உலகில் பல நாடுகள் தமக்கான தடுப்பூசிகளை உற்பத்தி செய்துகொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

# ’அள்ளிச் சென்ற எட்டுப்பேர் கைது’



தீப்பற்றி எரிந்த இரசாயன சரக்குக் கப்பலில் இருந்து, கடலுக்குள் விழுந்து கரையொதுங்கும் இரசாயனப் பொருள்களை அள்ளிச் சென்ற 8 பேர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இதற்காகப் பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றையும், பொலிஸார் கைப்பற்றி உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இரசாயனப் பொருள்களை அள்ளுவதற்காக கடற்கரையோரங்களுக்கு எவரும் செல்ல வேண்டாமெனவும் அறிவுறுத்திய அஜித் ரோஹன, அவ்வாறு செல்லும் நபர்கள் கைது செய்யப்படுவார்களெனவும் எச்சரித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமை, மனித உடலுக்குத் தீங்கிழைக்கும், சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தும் இரசாயனப் பொருகள்களை எடுத்துச் சென்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் அவர், துங்கால்பிட்டிய பொலிஸாரால் இச்சம்பவம் தொடர்பில் இருவரும், பொருள்களை ஏற்றிச்செல்லப் பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

பமுனுகல, கொச்சிக்கடை பொலிஸாரால் தலா மூவரென, ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் சமூகவலைத்தளங்களில் உள்ள வீடியோவைக் கொண்டு ஏனையவர்களையும் கைது செய்வதற்காக நான்கு பாரிய சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# ’வதந்திகளை நம்பாதீர்’



நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெறுமென பரப்பப்படும் வதந்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டாமெனவும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ள அமைச்சின் செயலாளர், நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெறுமென பரப்பப்படும் வதந்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றார்.

மேலும், நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இராணுவம் உள்ளிட்ட நீதி தொடர்பில் செயற்படும் ஏனைய நிறுவனங்களும் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா அறிவித்துள்ள நான்காம் நிலைப் பயணக்கட்டுப்பாடுகளில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் குறிப்பிடப்படுவது இயல்பான ஒன்றெனவும் அமைச்சின் செயலாளர் விளக்கமளித்துள்ளார்.



## தப்பியோடிய தொற்றாளர் சிக்கினார்

கொள்ளுப்பிடியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தப்பியோடிய கொரோனா தொற்றாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இந்த நபர், நேற்று முன்தினம் (26) தனியார் வைத்தியாலையில் இருந்து தப்பியோடிதன் பின்னர், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்த கொள்ளுப்பிட்டி பொலிஸார், குறித்த நபர் தொடர்பான தகவல்கள் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்திருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, தமன பொலிஸாரால் இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, பல்லேமுன கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அவரை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இந்த நபர் குணமடைந்ததன் பின்னர், அவருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அஜித் ரோஹன தெரிவித்தார்.



# அத்தியாவசிய பொருள் விநியோகத்துக்கு வாகனங்கள்

கொழும்பு மாவட்டம் முழுவதும் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதற்காக 8 ஆயிரம் மொபைல் வாகனங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்டச் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இந்த வாகனங்களுக்கு மாத்திரமே வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் மாவட்ட செயலாளர், இந்த வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்ட பாதைகளில் மாத்திரமே பயணிக்க முடியுமெனவும், இதேவேளை இந்த ஆலோசனைகளைப் பின்பற்றாத வாகனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள 577 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கே இவ்வாறு பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தங்களது பிரதேசங்களுக்கு இந்த வாகனங்கள் வரவில்லை என்றால், இது தொடர்பில் அப்பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்க முடியும். அல்லது 0112 369139 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களை கொழும்பு மக்களுக்கு விநியோகிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள இந்த வாகனங்களில் சில சில நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், முடிந்தளவு பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கவே முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

### கப்பலில் கரையொதுங்கிய பொருட்கள்;

# துப்புரவு பணியில் படையினர்

எம்.இஸட்.ஷாஜஹான்

தீப்பற்றி எரிந்த X-Press Pearl என்ற சரக்குக் கப்பலில் இருந்து கரையொதுங்கும் பொருள்கள் மற்றும் பொலித்தீன் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் நீர்கொழும்பு கடற்கரையோரங்களில் கரையொதுங்கி வருகின்றன.

இக்கப்பலில் இருந்து வெளியேறும் பொருள்களை தொடவோ, எடுத்துச் செல்லவோ அல்லது திறந்து பார்க்கவோ வேண்டாம் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் (26) பொதுமக்கள் சிலர் இப்பொருள்களை சேகரித்துள்ளனர்.

இந்நிலையில், நீர்கொழும்பு கடற்கரையோரங்கள் மற்றும் மீன் சந்தை உள்ளிட்ட பகுதிகளை படையினர் சுத்தப்படும் பணிகளில் நேற்று (27) ஈடுபட்டனர்.

இதன்போது கடற்கரையோரத்தில் ஒதுங்கிவரும் இரசாயன மூலப்பொருள்கள், கழிவு, சிதைவு பொருள்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் உள்ளிட்டப் பல்வேறு பொருள்கள் சேகரிக்கப்பட்டு உறைகளில் போடப்பட்டு, அவைகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## மொரட்டுவையில் பதற்றம்

மொரட்டுவவில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிகழ்வின்போது, நேற்று (27) காலை பதற்றநிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பதற்றநிலை தொடர்பில் தெரியவருவதாவது;

மொரட்டுவ மேயர் சமன்லால் பெர்னாண்டோ, டோக்கன்களை வழங்கியவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போட வேண்டும் என்று சுகாதார அதிகாரிகளிடம் கோரியதை அடுத்து, மொரட்டுவவில் பதற்றமான நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மொரட்டுவ மேயரின் கோரிக்கையை, பிரதேச சுகாதார அதிகாரிகள் மறுத்ததால் பதற்றநிலை ஏற்பட்டது.

இதேவேளை, இரு தரப்பினரிடமிருந்தும் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘எங்களுக்கும் தடுப்பூசி ஏற்றுங்கள்’

மஹேஸ் கீர்த்திரத்ன

தமக்கும் விரைவாக கொரோனா தடுப்பூசிகளை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, விடுமுறைக்காக இலங்கை வந்துள்ள கப்பல் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விடுமுறைக்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள இலங்கையைச் சேர்ந்த குறித்த அதிகாரிகள், தமது விடுமுறைக் காலம் நிறைவடைந்து மீண்டும் பணிகளுக்குச் செல்ல முடியாது இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். கப்பல் பணிக்காக மீண்டும் செல்ல வேண்டுமாயின் கொரோனா தடுப்பூசி ஏற்றியிருப்பது அவசியம் என, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அறிவித்துள்ளதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில், அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ள நிலையில், இதுவரை தமக்கு தடுப்பூசி ஏற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ‘பொறுமை காத்திருங்கள்’



ஒரு பிரதேசத்துக்கு தடுப்பூசிகள் கிடைக்கும்போது, கிடைக்காத பிரதேசங்களில் உள்ளவர்கள் சந்தேகம் கொள்ளாது, தடுப்பூசிகளுக்காகக் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமெனத் தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், அநாவசியமாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டாமெனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் முதற்கட்டமாக குருநாகல், காலிக்கு தலா 50 ஆயிரமும், மாத்தறைக்கு 25 ஆயிரம் தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி இத்தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத்

> “ட நிபுணர்களால் பரிந்து உரைக்கப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மாத்திரமே தடுப்பூசி செலுத்தப்படும்

அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்குறித்த மாவட்டங்களில் தொற்று நோய் விசேட நிபுணர்களால் பரிந்துரைக்கப்படும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு மாத்திரமே செலுத்தப்படுமெனவும், தடுப்பூசி கிடைக்காத ஏனையப் பிரதேசங்களுக்கும் இத்தடுப்பூசிகள் கிடைக்கும் வரையில் மக்கள் பொறுமையாக இருக்க வேண்டுமெனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.



## ‘புத்த ரஷ்மி’ தேசிய வெசாக்



‘புத்த ரஷ்மி’ தேசிய வெசாக் வலயம், கொழும்பு ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் (26) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், அமெரிக்காவின் பிரதான சங்கநாயக்கர் வல்பொல பியனந்த தேரர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# ‘காற்றின் வேகம் அதிகரிக்கலாம்’

தற்போது நிலவும் வானிலை மாற்றத்தால் புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோ மீற்றர் வரையில் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அவ்வப்போது கடல் கொந்தளிப்பாக காணப்படலாமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதோடு, கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்பதால், கடற் கரையோரங்களில் உள்ளவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




@ மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த மூன்று பொலிஸார் உள்ளிட்ட 37 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

@ தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 587 பேர் நேற்று முன்தினம் (26) கைது செய்யப்பட்டுள்ளனர்.

@ 5 மாவட்டங்களில், கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி செலுத்தும் 9 நிலையங்களை இராணுவம் ஸ்தாபித்துள்ளது.

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை கொத்தணியால்

# ‘வயோதிபர்களுக்கு ஆபத்து’

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆடைத்தொழில் சாலையில் இருந்து அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களால் அவர்களின் வீடுகளில் உள்ள வயோதிபர்கள் பாதிக்கப்பட்டு, நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்கு வருவதாக, முல்லைத்தீவு மாவட்டத் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் வி. விஜிதரன் தெரிவித்தார்.

அத்துடன், முல்லைத்தீவில் தொற்றாளர்களை இனம் காண்பதற்காக, வீடு வீடாகச் சென்று, பி.சி. ஆர் பரிசோதனையை முன்னெடுக்கப்போவதாகவும், அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (26) நடைபெற்ற கொவிட்-19 தொடர்பான கூட்டத்தின் போது, முல்லைத்தீவு மாவட்ட நிலைமைகள் தொடர்பில் கருத்துரைத்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் இளைஞர், யுவதிகள் என்பதால், அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுக் கண்டறியப்பட்டாலும், அதன் அறிகுறிகள், தாக்கம் என்பவை வெளித்தெரியவில்லை. ஆனால், அவர்களின் வீடுகளில் உள்ள வயோதிபர்கள், இவர்கள் ஊடாக தொற்றுக்குள்ளாகி, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் கூறினார்.

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிவர்களில் மூன்றில் இரண்டு பேருக்கே, பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த அவர். இந்நிலையில், அதில் பணியாற்றிய அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறினார்.

தற்போது, வைத்தியசாலையில் பி.சி.ஆர் எடுப்பவர்களில் 50 சதவீதமானவர்களுக்கு, கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்களின் வயது 45க்கு மேற்பட்டதாகக் காணப்படுவதாகவும் கூறினார்.




சுகாதார ஊழியர்களுக்கு

## ‘தடுப்பூசியும் விசேட கொடுப்பனவும் வேண்டும்’

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கொரோனா சிகிச்சை நிலையங்களில் பணியாற்றும் உள்ளூராட்சி மன்ற சுகாதார ஊழியர்களுக்கு, கொரோனா தடுப்பூசி வழங்குமாறு கேட்டுக்கொண்ட அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், அவர்களுக்கான விசேட கொடுப்பனவையும் வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

கிளிநொச்சி ஊடக மையத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அச்சங்கத்தின் வடமாகாண இணைத் தலைவர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தி, இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வடக்கு, கிழக்கில் 2,000க்கு மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் நிரந்த நியமனம் இல்லாது சேவையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அனைவரும் உள்ளூராட்சி மன்றங்களில் பணியாளர்களாக 3 ஆண்டுகளுக்கு மேல் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய கொவிட் - 19 அச்சுறுத்தல் நிறைந்த சூழலிலும், அவர்கள், தமது சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, கொரோனா தடுப்பூசியை அவர்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்றும், அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், அவர்களது குடும்பங்களுக்கும் கொரோனா தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்திய அவர், அவர்களுக்கான நிரந்தர நியமனத்தையும் வழங்க வேண்டுமென்றார்.

மேலும், இச்சூழ்நிலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு, விசேட கொடுப்பனவையும் வழங்க முன்வர வேண்டுமென்றும், ஆறுமுகம் புண்ணியமூர்த்தி கேட்டுக்கொண்டார்.

## ‘மேலுமொரு சிகிச்சை நிலையத்தை அமைக்க ஏற்பாடு’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



இன்னும் 400 கட்டில்கள் போடக் கூடிய வகையில் மேலுமொரு சிகிச்சை நிலையத்தை ஒழுங்குப்படுத்திக் கொண்டு இருப்பதாகத் தெரிவித்த மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், இன்னும் இரண்டு வாரங்களில் அந்தப் புதிய சிகிச்சை நிலையத்தையும் செயற்படுத்தக் கூடியதாக இருக்குமென்றும் கூறினார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்துரைக்கையில், மன்னார் மாவட்டத்தில், தற்போது பெண்களுக்கான கொரோனா சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேலும் 400 கட்டில்கள் போடக்கூடிய வகையில், கொரோனா சிகிச்சை நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள், சுகாதாரத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாவும் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்கள், அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்தி செய்வதில் மக்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லையெனத் தெரிவித்த அவர், ஒவ்வொரு கிராமங்களிலும் நடமாடும் சேவையின் மூலம் மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளையும் தேவைகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் கூறினார்.

## பொலிஸாரின் உதவியுடன் உரம் விநியோகம்

■ நடராசா கிருஸ்ணகுமார்



பொலிஸாரின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கான உரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கையை மாவட்ட கமநல சேவை நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 10 கமநல சேவை நிலையங்களிலும் சிறுபோகத்துக்குத் தேவையான உரங்கள், பயணக் கட்டுப்பாடு காரணமாக விநியோகிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

இந்நிலையில், கமநல சேவை நிலையங்களில் இருந்து உரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, முல்லைத்தீவு விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தனர்.

இதனை தொடர்ந்து, கிராமங்களில் இருந்து உழவு இயந்திரங்களை வரவழைத்து, உரங்களை கொண்டு சென்று விநியோகிப்பது என்றும், பயணக் கட்டுப்பாடு தொடர்பாக பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிறந்து 24 நாள்களேயான

## சிசுவுக்கு கொரோனா

■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் பிறந்து 24 நாள்களேயான சிசுவுக்கு, கொரோனா வைரஸ் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்று நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிசு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம், சிசுவுக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிசு, தற்பொழுது வைத்திய நிபுணர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, தாய்க்கும் தொற்று உறுதியாகி உள்ளது.

ஆடைத்தொழிற்சாலையில் 71 பேருக்கு கொரோனா;

# வைத்தியசாலைகளில் கட்டில்கள் நிரம்பின

■ வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட தனியார் ஆடைத் தொழிற்சாலையில், கடந்த 4 நாள்களில் 71 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில், 128 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட தனியார் ஆடைத் தொழிற்சாலை, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (30) வரை தற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளது.

“திங்கட்கிழமையன்று, ஆடைத் தொழிற்சாலைக்கு வைத்தியர் குழு சென்று, அங்கு நிலைமையை ஆராய்ந்த பின்னரே, மீண்டும் திறக்கப்படுவது தொடர்பில் முடிவு எடுக்கப்படும்” என்றார்.

இதேவேளை, கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் கரடியனாறு வைத்தியசாலை, காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலைகளில் கட்டில்கள் நிரம்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது அடையாளம் காணப்படும் தொற்றாளர்களை வேறு மாவட்டத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

புதிதாக வாகரை, வாழைச்சேனை, நாவற்காடு ஆகிய வைத்தியசாலைகள் கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## வெசாக்

வெசாக் தினத்தையொட்டி, மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படை முகாமில், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, வெசாக் தின வழிபாடுகள் நடைபெற்றதுடன், வெசாக் அலங்காரப் பந்தலும் அமைக்கப்பட்டிருந்தது.
(படங்கள் – வ.சக்தி)



சட்டவிரோத

## வெடிமருந்துகள் மீட்பு; இருவர் கைது

■ அப்துல்சலாம் யாசீம், எம்.எம்.அஹமட் அனாம், கனகராசா சரவணன்



திருகோணமலை, இறக்கக்கண்டி பிரதேசத்தில் சட்டவிரோத வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில், நேற்று (27) அதிகாலை இருவர், விசேட பொலிஸ் அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு, குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத வெடிமருந்துகளை வீட்டில் மறைத்து வைத்திருப்பதாக, திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து, 85 ஜெலட்னைட் கூறுகள் கைப்பற்றப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்கள், இறக்கக்கண்டி, வாலையூற்று பகுதியைச் சேர்ந்த 35, 38 வயதுடையவர்கள் எனவும், வெடிமருந்துகள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட இருந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.




அமுலில் உள்ள

## கட்டுப்பாட்டை மீறும் மக்கள்

■ பாறுக் ஷிஹான்




பயணக் கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில் கொரோனா சட்டதிட்டங்களை மீறி, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்தியத்தில் உள்ள காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வழமை போன்று மக்கள் பயணங்களில் ஈடுபடுவதை காண முடிகின்றது.

குறிப்பாக, நேற்று (27) அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் உள்ள இப்பகுதியில் உள்ள கடற்கரை பகுதி உள்வீதி மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள உள்ளக வீதிகளில் கொரோனா சுகாதார நடைமுறைகளை மீறி தத்தமது வாகனங்களில் மக்கள் வழமை போன்று நடமாடினர்.

பொலிஸார், சுகாதாரத் தரப்பினர் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நடமாட்டம் மந்த கதியில் உள்ளதை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மக்கள் இவ்வாறு பயணக் கட்டுப்பாட்டு மீறலில் ஈடுபடுகின்றனர்.

நாட்டின் சகல பகுதிகளுக்கும் வேகமாக பரவி வருகின்ற கொரோனாவின் 3ஆவது அலையைத் தவிர்ப்பது நாட்டிலுள்ள சகல பிரஜைகளின் கடமையல்லவா?



மாத்தளையை கண்காணித்த

## மோட்டார் சைக்கிள் படையணி

காஞ்சனகுமார ஆரியதாஸ

மாத்தளை மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை மீறுபவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைக்காக நேற்று (27) மாத்தளை நகரில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 53ஆவது படையணியின் பிரதானி மேஜர் ஜெனரல் நிசாந்தவின் தலைமையில், 60 இராணுவ வீரர்களைக் கொண்ட மோட்டார் சைக்கிள் படையணியானது மாத்தளை நகர் முழுவதையும் நேற்று கண்காணித்தது.

மேலும் இராணுவத்தினரால் ட்ரோன் கமெரா மூலமான கண்காணிப்பும் மாத்தளையில் முன்னெடுக்கப்பட்டது.

வரலாற்றில் முதற்றடவையாக

## ஆயுள் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு

நதீக தயாபண்டார

சிறைச்சாலை வரலாற்றில் முதற்தடவையாக ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கியதாக சிறைச்சாலைகள் நடவடிக்கை தொடர்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

குறித்த கைதிகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்ட பின்பே, அவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டதாகவும் 2002ஆம் ஆண்டு இவ்வாறான பொதுமன்னிப்பு இம்முறையே வழங்கப்பட்டதென்றார்.

நேற்று(27) கண்டி- மஹியாவ பிரதேசத்தில் உள்ள இராஜாங்க அமைச்சரின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

வெசாக் தினத்தையொட்டி 260 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட நிலையில், 53



பேர், விடுதலையாகி வீடுகளுக்குச் சென்றுள்ளதுடன், ஏனையோர் விரைவில் விடுதலையாவார்கள் என்றார்.

75 சதவீதமானவர்கள் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை தொடர்பாகவே சிறைத்தண்டனை பெறுகிறார்கள் என்றும் எனவே போதைப்பொருள் தொடர்பான சட்டத்திட்டங்களை கடுமையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பயணக்கட்டுப்பாட்டுக்குள்

# புகுந்த போதை





### ஹப்புத்தளையில்...

எம். செல்வராஜா

ஹப்புதளைப் பகுதியில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபரொருவர் நேற்று (27) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஹப்புதளை- ரத்தாவ பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் 80,000 லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடா உள்ளிட்ட தயாரிப்பு பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

### பொகவந்தலாவையில்...

எம். கிருஸ்ணா


சுயதனிமை பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பொகவந்தலாவ பகுதியில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட இருவேறு சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர், நேற்று முன்தினம் (26) பொகவந்தலவ பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

பொகவந்தலாவ- சிரிபுர பகுதியில் மதுபானம் விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 83 மதுபான போத்தல்களை பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன், டின்சின் பகுதிக்கு விற்பனைக்காக கொண்டு சென்ற 20 மதுபான போத்தல்களுடன் ஒருவரையும் பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### கினிகத்தேனையில்...

எஸ். சதீஸ்




கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகமுவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரித்து வந்த நான்கு சந்தேக நபர்களை கினிகத்ததேனை பொலிஸார் கைது செய்துள்ளதோடு, சந்தேகநபர்களிடமிருந்து 40ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



### நோர்வூட்டில்...

எஸ்.கணேசன்

சட்டவிரோதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபரொருவர் நோர்வூட்- அயரபி தோட்டத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

22 வயதுடைய குறித்த இளைஞர், தான் தயாரித்த சட்டவிரோத மதுபானம் போத்தல் ஒன்றை 1,200 ரூபாய்க்கு விற்பனை செய்தாரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### தெரணியகலையில்...

என்.ஆராய்ச்சி

தெரணியகல- மாலிபொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் (26) 15,000 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவரை இந்த மாதம் 31ஆம் திகதி அவிசாவளை நீதவான் நீதிபதியிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




## மாணிக்கக்கல் அகழ்ந்த இருவர் கைது

மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் உள்ள இருவர் பயணக்கட்டுப்பாடுகள் அமுலில் உள்ள நிலையில், சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வதற்கு முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளனர். உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

## வெறிச்சோடிய ஹட்டன் நகரம்



கொரோனா பரவலால் கடந்த 26ஆம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டால், எப்போதும் ஆரவாரம்மிக்க நகரமாகக் காணப்படும் ஹட்டன் நகரம், வெறிச்சோடிப் போயுள்ளதை படத்தில் காணலாம் ( சுதத்.எச்.எம்.ஹேவா)




பொகவந்தலாவை பொதுச் சுகாதார அலுவலகத்துக்குட்பட்ட பகுதியில் மேலும் 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது (எஸ். சதீஸ்)

---

மொனராகலை மாவட்டத்தில், நேற்று முன்தினம் (26) 23 தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர். ( சுமணசிறி குணதிலக)

---

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் (26) கொரோனா தொற்றாளர்கள் 216 புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இதுவரை 3,735 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.( சுதத்.எச்.எம்.ஹேவா)

---

மாத்தளையில் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களை மீறிய 155 பேர் நேற்று முன்தினம் (26) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.(மஹேஸ் கீர்த்திரத்ன)

---

## மரம் முறிந்து வீழ்ந்ததில் இருவருக்கு காயம்

எஸ்.கணேசன்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய இராணிவத்தை தோட்டத்தில் பாரியமரமொன்று 2.30 மணியளவில் முறிந்து வீழ்ந்ததில் வீடொன்று சேதமடைந்துள்ளது. இதில் இருவர் காயமடைந்து லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர் சமையலறையில் இருந்த 38 வயதுடைய தாயும், 6 வயதுடைய மகளும் காயமடைந்துள்ளனர். அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இறம்பொடை தொண்டமான் கலாசார மண்டபம்

## இடைநிலை சிகிச்சை நிலையமாக மாறியது

எஸ்.கணேசன்

அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, கொத்மலை- இறம்பொடை தொண்டமான் கலாசார மண்டபத்தில், இடைநிலை கொரோனா சிகிச்சை பிரிவு ஒன்றினை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் சுகாதார பிரிவினருக்கு நாளைய தினம் (29) கையளிக்கப்படும் என பிரஜா சக்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளரும், கொவிட் பாதுகாப்பு செயலணியின் மலையகத்துக்குப் பொறுப்பான பிரதானியுமான பாரத் அருள்சாமி தெரிவித்ததுடன், குறித்த நிலையத்துக்குத் தேவையான சமையலறை, பாதை, கட்டில்கள், வாகன தரிப்பிடங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகள் இதன் போது விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனடிப்படையில், இராணுவத்தினர் தற்போது 275 படுக்கைகள் கொண்ட வசதி மையத்தை நிர்மாணித்துள்ளதுடன், வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள், இராணுவ வீரர்கள் ஆகியோர் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலைமையை பார்வையிடுவதற்காக, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையகத்துக்குப் பொறுப்பான கொவிட் பாதுகாப்பு செயலணியின் பிரதானி பாரத் அருள்சாமி ஆகியோர் சென்று நிலைமையையும் ஆராய்ந்தனர்.



மழையால் மலையகத்தில்

## பயிர்களுக்கும் வீடுகளுக்கும் சேதம்

இந்திக அருணகுமார, மஹேஸ் கீர்த்திரத்ன

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால், நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களின் பல இடங்களில் விவசாய உற்பத்திகளுக்கும் வீடுகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கமைய மாத்தளை மாவட்டத்தில் கடும் காற்றுடனான அடை மழை பெய்து வருவதால், விவசாய உற்பத்தி நிலங்கள் நீரில் மூழ்கியதுடன், மரங்களும் முறிந்துள்ளன. இதனால் எதிர்வரும் நாள்களில் மாத்தளை மாவட்டத்தில் பழங்கள், காய்கறிகளின் பொருள்களில் விலை அதிகரிப்பு ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தோட்ட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கைக்காவல, வனராணிய, வராப்பிட்ட ஆகிய இடங்களிலுள்ள 3 வீடுகள் காற்றால் சேதமடைந்துள்ளன.



சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 300 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளம் மற்றும் மண்சரிவால் 15 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

# அபாயக் கழிவுகளை அள்ளும் சுயபுத்தி இல்லாத சனக்கூட்டம்

எந்தவொரு தொழிற்றுறையைச் சேர்ந்தவர்கள், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டாலும் அதன்தாக்கம் மூக்கை அரிக்காது. ஆனால், தூய்மைப் பணியாளர்கள் இரண்டு நாள்களுக்கு நேரம் சுணங்கிவிடின், அப்பகுதியே நாற்றமெடுக்கும். ஆனாலும், தூய்மைப் பணியாளர்கள், கழிவுகளை வகைப்பிரித்து அகற்றிச்செல்வர்.

ஒவ்வொரு தொழிலையும் செய்யும்போது, புத்திக்கூர்மை முக்கியமானது. ஆனால், பேராபத்தை விளைவிக்கக்கூடிய நஞ்சென அறிவுறுத்தியும், அபாயக் கழிவுகளை அள்ளிச்செல்லும் மக்களை, சுயபுத்தியில்லாத சனக்கூட்டமெனச் சொல்வதே சாலவும் பொருந்தும்.

நாட்டில் பயணக்கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன; வீடுகளை விட்டு முக்கிய கடமைகளுக்கு மட்டுமே வெளியேவர முடியும். பல நிறுவனங்கள், 'வீட்டிலிருந்து வேலை' எனும் முறைமையைப் பின்பற்றுகின்றன. அவை எல்லாமே, கொரோனா வைரஸ் தொற்றுவதைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகளாகும்.

ஆனால், பஞ்சபூதங்களில் ஒன்றான நெருப்பு, கொழும்புத் துறைமுகத்துக்கு வடமேல் திசையில் நங்கூரமிட்டுள்ள 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' சரக்குக் கப்பலில் தீப்பிழம்பாய் கிளம்பி, கரும்புகையைக் கக்கி, எரிந்துகொண்டிருக்கிறது. இதனால், ஏனைய நான்கு பூதங்களான வானம், காற்று, நீர், நிலம் ஆகியவை கடுமையாக மாசாகி வருகின்றன.

தீப்பற்றி எரியும் அக்கப்பல், இரண்டாகப் பிளந்துள்ளது. அதிலிருந்து, கொள்கலன்களும், அபாயகரமான பொருள்களும் கழிவுகளும் கரையொதுங்குகின்றன. பொலித்தீன் தயாரிப்பதற்கான இரசாயனத் திரவியத்தை, ஏற்றிவந்த கப்பலே, தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது. அதிலிருந்து கரையொதுங்கும் பொருள்களைத் தொடவேண்டாமென, எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

ஆனால், பமுனுகம, துங்கால்பிட்டிய, கொச்சிக்கடை, நீர்கொழும்பு போன்ற பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரையோரங்களைச் சேர்ந்தவர்கள், கரையோரங்களில் மொய்த்து, பொருள்களை அள்ளிச்செல்கின்றனர். அவர்களில் சிலருக்கு, தோல் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

பயணக்கட்டுப்பாட்டுக் காலத்தில், அரசாங்கத்தின் கட்டளையை மீறுகின்ற மக்கள், கொரோனாவின் தொற்றுக்கு அப்பால்சென்று, 'ஒவ்வாமைத் தொற்றை' ஒட்டிக்கொண்டுள்ளனர். இது, எவ்வாறான வகைகளில் உருமாறி, விஷ்வரூபமெடுத்து ஆடப்போகிறது என்பதற்கு, காலமே பதில்சொல்லும்.

அள்ளிக்குவித்த பொருள்களில், இரசாயனம் இருந்துள்ளமை, கொட்டிக்கிடந்தவற்றை பார்க்கும் போது புலனாகிறது. இன்னும் சில, பொதிகளில் இனிப்புப் பண்டங்களும், வாசனைத்திரவியங்களும் இருந்துள்ளன.

வீதியோரங்களிலும், பொதுப் போக்குவரத்துகளிலும் கூவிக்கூவி விற்போரில் பலர், சட்டவிரோதமான பொருள்களை, குறைந்த விலைக்கு விற்பது ஒன்றும் இரகசியமல்ல: ஆகையால், பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்போது, அவையெல்லாம் சந்தைக்கு வந்தே தீரும். நுகர்வோர்தான் விழிப்பாக இருக்கவேண்டும்.

ஐம்பூதங்களும் மாசுற்று இருப்பதால், என்னென்ன தொற்றுநோய்கள் தொற்றிக்கொள்ளும் என்பதை எல்லாம் யூகிக்கவே முடியாது. ஆனால், அபாயக் கழிவுகளை அள்ளும், சுயபுத்தியில்லாத சனக்கூட்டம் இருக்கும் வரையிலும், அவற்றையெல்லாம் அனுபவித்தே ஆகவேண்டும். அதில், மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எப்போதும் கெட்ட விடயங்களைப் பற்றியே, பேசிக்கொண்டிருந்தால், அதைப் பேசும் நபரும் அவ்வண்ணமே மாறிவிடுவார்.

மனவிகாரம் அடையும்படியான எந்தவிதமான பேச்சு, சிந்தனைகள் என்பவை, ஒருவரைத் துஷ்டராக மாற்றிவிடலாம். மனம் வழி செல்லலாகாது. உடன் முற்றுப்புள்ளி வைத்திடுக.

ஆனால், மனதைக் கட்டுப்படுத்த முடியாத தவறுகள் உங்களுடையவை. உங்கள் எண்ணம், மனம் சஞ்சலப்பட்டுவிடும் என்பதற்காகச் சிந்திக்கத் தலைப்படாமல் இருப்பதே மூலகாரணமாகும். எந்தப் பிரச்சினைகள் வந்தாலும், உங்கள் சிந்தனைக்கு உயிரூட்டுங்கள்.

பாய்ந்து செல்லும் இதய அலைகளைக் கட்டி வைக்கும் நல்லறிவுதான் அவசியம். அது, உங்களுடனேயே வாழ்ந்த வண்ணம் இருக்கின்றது. அதை இயக்கிய வண்ணம் இருங்கள்.

அப்படி இருந்தால், உங்களை அசைக்கவே முடயாது. ஸ்திர நிலையில் ஒளி மயமான வாழ்வுடன் இணைந்து விடுவீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கொரோனா சிகிச்சை நிலையத்தில்
## மழையில் நனையும் நோயாளிகள்

வவுனியா, மூன்றுமுறிப்பு பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில், சிகிச்சை பெற்று வருபவர்கள், உரிய வசதிகள் செய்துதரப்படவில்லை என்று, விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, தற்போது மழையுடனான வானிலையும் வேகமான காற்றும் வீசி வருவதால், நோயாளிகள் படுத்திருக்கும் விடுதிக்குள் தூவானமாக மழைச் சாரல்கள் வந்து நனைக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், வயது முதிர்ந்த நோயாளர்கள் பெரும் துன்பங்களை அனுபவிப்பதாகவும், பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். பொதுவாக, நிலையத்தை நிர்வகிக்கும் முறைமையில், தீர்வுகாணப்பட வேண்டிய குறைபாடுகள் காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, நோயாளர்களின் நலன்கருதி, குறித்த சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறுவோர், குறைந்தது மழையில் நனையாதவாறாவது ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என இங்கு சிகிச்சைபெற்றுவரும் நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வவுனியா பொருளாதார மத்திய நிலையம், 200 கட்டில்களைக் கொண்ட, கொரோனா சிகிச்சை நிலையமாக, அண்மையில் இராணுவத்தினரால் மாற்றி அமைக்கப்பட்டிருந்தது.

–க. அகரன்



### தடுப்பூசியில் அரசியல்:
# மனிதவுரிமை யோக்கியர்கள் எங்கே?

தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

'புதிய வழமை' என்பது, இப்போது பழக்கப்பட்டுப் போய்விட்டது. முன்னொரு காலத்தில், (வரலாற்றில் அவ்வாறுதான் குறிக்கப்படும்) மனிதர்கள் நேருக்கு நேரே சந்திக்கும் போது, "நலமாக இருக்கிறீர்களா?" என்ற நலன்விசாரிப்புடன் உரையாடல் தொடங்கும்.

இப்போது, இந்த உரையாடல் தொலைபேசி வழியே நடக்கிறது, "தடுப்பூசி போட்டுவிட்டீர்களா?" என்ற நலன் விசாரிப்புடன்! காலங்கள் மாறிவிட்டன; ஆனால், அனைத்தும் மாறிவிடவில்லை என்பதை, தடுப்பூசிகளை மையமாக வைத்து, நிகழ்ந்துகொண்டிருக்கும் அவலமும் அதன் அரசியலும், வெட்டவெளிச்சமாக்கி உள்ளன.

சில நாடுகள், தங்கள் தேவையை விடப் பன்மடங்கு அதிகமான தடுப்பூசிகளை வைத்திருக்கையில், இன்னும் சில நாடுகள், தங்கள் தேவையின் பத்துவீதத்துக்குப் போதுமானவற்றைக் கூடக் கொண்டிருக்கவில்லை என்ற அவலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த அசமத்துவம் ஏன்?

இதை இன்னும் சரியாகச் சொல்வதாயின், தடுப்பூசிகள் பாவனைக்கு வரத்தொடங்கி, ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில், உலகில் உள்ள ஒன்பது நாடுகள், உலகளாவிய மொத்தத் தடுப்பூசிகளில் 45%யை வைத்திருக்கின்றன.

இன்னும் ஒருவருக்கு கூட, 36 நாடுகளில் தடுப்பூசி ஏற்றப்படவில்லை. தடுப்பூசி வைத்திருக்கும் நாடுகளுக்கும் இல்லாத நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி மிக அதிகம். கடந்த ஆறு மாதங்களில், இந்த இடைவெளி அதிகரித்த வண்ணமே உள்ளது.

இது எதைக் காட்டி நிற்கின்றது? உலகில் உள்ள 108 நாடுகளுக்கு 31.4 மில்லியன் தடுப்பூசிகளை 20 நாடுகளே வழங்கியுள்ளன. இதில் மூன்று நாடுகள், முன்னிலையில் உள்ளன. அவை முறையே சீனா, ரஷ்யா, இந்தியா.

சீனா, இதுவரை 80 நாடுகளுக்கு இலவசமாகத் தடுப்பூசிகளை வழங்கியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் வரை, 17.6 மில்லியன் தடுப்பூசிகளை சீனா கொடுத்துதவி உள்ளது. இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், பயன்பெற்ற நாடுகளில் பெரும்பான்மையாவை, சீனாவின் 'ஒரு பட்டி; ஒரு வழி' நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துள்ள நாடுகளாகும்.

சீனாவின் இந்த நிகழ்ச்சித்திட்டம், இப்போது 'உயிர்காக்கும் மருந்துகளை வழங்குவதற்கான நுழைவாயில்' என்று அறியப்படுகிறது. சீனா, இப்போது முன்னெடுக்கும் இலவச தடுப்பூசி வழங்கல் மூலம், தனது செல்வாக்கை அதிகரித்திருக்கிறது.

உலகில் அதிகளவான தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. இதனாலேயே இந்தியப் பிரதமா நரேந்திர மோடி, தடுப்பூசி நட்புறவை (Vaccine Maithri) முன்மொழிந்தார். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், இந்தியாவை, 'உலகின் மருந்துச்சாலை' (Pharmacy of the world) என்று அழைத்தார். சீனாவுக்குப் போட்டியாக, 48 நாடுகளுக்கு இந்தியா தடுப்பூசிகளை வழங்குவதற்குத் திட்டமிட்டிருந்த நிலையில், இந்தியாவில் அதிகரித்த கொரோனாத் தாக்கம், அதைச் சாத்தியமற்றதாக்கி உள்ளது.

கொரோனாவுக்கான தடுப்பூசியை, முதலில் கண்டுபிடித்த நாடு ரஷ்யா. கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி, ரஷ்யாவின் Gamaleya Research Institute of Epidemiology and Microbiology கண்டுபிடித்த 'ஸ்புட்னிக் வீ' தடுப்பூசியை, ரஷ்யா அங்கிகரித்தது.

ஆனால், இந்தத் தடுப்பூசி தொடர்பில் மேற்குலக நாடுகள் பலத்த சந்தேகம் வெளியிட்டன. இந்தத் தடுப்பூசி தரமற்றது எனவும் இதைப் பயன்படுத்தினால் உயிராபத்து வரும் என்றும், மேற்குலக ஊடகங்கள் எழுதின. இதை, அறிவியல்பூர்வமாக ஏற்க இயலாது என்றெல்லாம் சொல்லப்பட்டது.

இன்று, இந்தத் தடுப்பூசியை 70 நாடுகள் பயன்படுத்துகின்றன. அதில் பெரும்பான்மையானவை இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகள். இப்போது ஆய்வுமுடிவுகளின் படி, இந்தத் தடுப்பூசி 92% வினைத்திறன் மிக்கது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

'ஸ்புட்னிக் வீ' தடுப்பூசி மீது வைக்கப்பட்ட விமர்சனத்துக்கான அறிவியல்காரணிகளை விட, அரசியல் காரணிகள் அதிகம். அதிலும் குறிப்பாக, மேற்குலக மருந்தாக்கல் நிறுவனங்களின் செல்வாக்கு மிக அதிகம்.

மேற்குலகம் தனது முதலாவது தடுப்பூசியாக, Pfizer-BioNTechவை கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி அறிவித்தது. இந்தத் தடுப்பூசியை, -80°C குளிர்நிலையில் சேமிக்கப்பட வேண்டும். எனவே இதற்கான வசதிகள் இன்றி, இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்தவோ, எடுத்துச் செல்லவோ முடியாது. எனவே, இந்தத் தடுப்பூசியை மூன்றாமுலக நாடுகளால் பயன்படுத்த இயலாது. ஆனால், இது மட்டுமே தடுப்பூசி என்ற வகையில், கடந்தாண்டு இறுதியில் நடந்த பிரசாரங்களை நினைவுகூர முடியும். இந்தத் தடுப்பூசி, அமெரிக்க-ஜேர்மன் நிறுவனங்களின் கூட்டுத்தயாரிப்பு ஆகும்.

இதைத் தொடர்ந்து, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட Moderna தடுப்பூசிக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டது. இது -25°C குளிர்நிலையில் சேமிக்கப்பட வேண்டியது. அவ்வகையில், Pfizer-BioNTechயை விடச் சேமிப்பது இலகுவானது. எனவே இவ்விரண்டுமே சந்தையில் முதன்மையான தடுப்பூசிகளாக விற்பனையாகின.

இவ்விடத்தைப் பற்றிக்கொஞ்சம் சொல்லியாக வேண்டும். இது திரவ வடிவில் -18°C குளிர்நிலையிலும் உறைநிலையில் 2°C முதல் 8°C வரையான வெப்பநிலையில் பேண முடியும். அதேவேளை, Pfizer-BioNTech, Moderna தடுப்பூசிகளின் விலை, சராசரியாக 37 அமெரிக்க டொலர். அதேவேளை, 'ஸ்புட்னிக் வீ' தடுப்பூசியின் விலை, சராசரியாக 8 அமெரிக்க டொலர். இங்குதான் இன்னொரு தடுப்பூசியின் கதையையும் சொல்ல வேண்டியிருக்கிறது.

பிரித்தானியாவில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ராசெனிக்கா நிறுவனமும் இணைந்து Oxford-AstraZeneca தடுப்பூசியை, 2020 இறுதியில் கண்டுபிடித்தார்கள். அஸ்ராசெனிக்கா நிறுவனம் பிரித்தானியா, சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குரியது. இந்தத் தடுப்பூசியை, 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி பிரித்தானியா அங்கிகரித்து. இன்றுவரை இந்தத் தடுப்பூசியை 145 நாடுகள் அங்கிகரித்துள்ளன. அங்கிகரிக்காத ஒரு நாடு அமெரிக்கா.

ஏற்கனவே, புழக்கத்தில் உள்ள Pfizer-BioNTech, Moderna தடுப்பூசிகளை உற்பத்தி செய்பவை, அமெரிக்க நிறுவனங்கள் என்பனை இங்கு நினைவூட்ட வேண்டும். Pfizer-BioNTech தடுப்பூசியை 99 நாடுகளே அங்கிகரித்துள்ளன. அதேவேளை, Moderna தடுப்பூசியை 56 நாடுகளே அங்கிகரித்துள்ளன.

முன்சொன்ன ஏனைய மூன்று தடுப்பூசிகளுக்கும் Oxford-AstraZenecaக்கும் இரண்டு முக்கிய வேறுபாடுகள் உண்டு. இதனால், Oxford-AstraZeneca முதன்மையானதாகக் கருதப்பட்டது. முதலாவது வேறுபாடு, இந்தத் தடுப்பூசியை 2°C முதல் 8°C வரையான வெப்பநிலையில் திரவவடிவில் பேண முடியும். எனவே, சாதாரண குளிர்சாதனப் பெட்டிகள் போதுமானவை.

இரண்டாவது, இந்தத் தடுப்பூசி ஒன்றின் விலை 3 அமெரிக்க டொலர் மட்டுமே. மூன்றாமுலக நாடுகளுக்கு வாய்ப்பான ஒரு தடுப்பூசியாக Oxford-AstraZeneca மாறியிருந்தது. ஏனைய கொரோனாத் தடுப்பூசிகள் போல, இந்தத் தடுப்பூசியின் பயன்பாட்டின் போதும் பக்க விளைவுகள் ஏற்பட்டன. இது, இந்தத் தடுப்பூசிக்கு எதிரான ஒரு காரணியானது.

அதேவேளை, இதன் வினைதிறன் 80% என அளவிடப்பட்டது. இதே தடுப்பூசியே, இந்தியாவில் Covishield என்ற பெயரில் உற்பத்தியாகிறது. இந்தியாவில் இதை உற்பத்தி செய்யும் நிறுவனம், இந்த தடுப்பூசி ஆய்வுக்காகத்தான் கோடிக்கணக்கில் செலவிட்டதாகச் சொல்லி, இந்திய அரசாங்கத்திடம் கோடிக்கணக்கில் பணம் பெற்றது தனிக்கதை.

இப்போது பயன்பாட்டில் உள்ள இன்னொரு பிரதானமான தடுப்பூசி, சீனாவில் உருவாக்கப்பட்ட Sinopharm ஆகும். சீனாவின் முக்கியமான உயிர்காக்கும் உதவிக்கான ஆயுதமாக, இந்தத் தடுப்பூசியே விளங்குகிறது. இது 86% வினைதிறனானது. இதையே சீனா உலகெங்கும் ஏற்றுமதி செய்கிறது; இலவசமாக வழங்குகிறது.

உலகில் மனித உரிமைகள் பற்றியும் அடிப்படை உரிமைகள் குறித்தும், ஓங்கிக் குரல்கொடுக்கும் யோக்கியர்கள் யாரையும் காணவில்லை. ஆறம் விழுமியங்கள் என, மேற்குலக நாடுகள் மற்ற நாடுகளுக்குப் போதித்தவை எதையும், அவர்களால் பின்பற்ற முடியவில்லை.

சில நாள்களுக்கு முன், ஈரானியப் பேராசிரியர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு முக்கியமான விடயத்தைச் சொன்னார். "ஈரானின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு உள்ளமையால், அவர்களால் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடியாது. எனவே அவர்கள் தங்களுக்கான தடுப்பூசியை அவர்களே தயாரித்துக் கொண்டுள்ளார்கள். அந்தத் தடுப்பூசி, 90% வினை திறனானது என, முதற்கட்ட ஆய்வுமுடிவுகள் நிரூபித்துள்ளன" என அந்தப் பேராசிரியர் தெரிவித்தார்.

இதேபோலவே, பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும், கியூபா தனக்கான இரண்டு தடுப்பூசிகளை உருவாக்கியுள்ளது. Soberana 02, Abdala ஆகிய பெயர்களை உடைய தடுப்பூசிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இங்கு விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில், பெருந்தொற்று உலகளாவிய ரீதியில் இருந்தாலும், அரசியலே கோலோச்சுகிறது. மனிதாபிமானம் என்ற பெயரில் கோரமுகம் காட்டப்படுகிறது.

கடந்தாண்டு நிறைவில், உலகளாவிய தடுப்பூசிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டதை, முன்பதிவுசெய்து வாங்கியவை மேற்குலக நாடுகள். அந்நாடுகளில் வாழும் மக்களின் மொத்த சனத்தொகை, உலக சனத்தொகையில் 14% மட்டுமே!

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது, கனடா தனது சனத்தொகைக்குத் தேவையானதை விட, ஐந்து மடங்கு அதிகளவான தடுப்பூசிகளை வாங்கிக் கொண்டிருக்கிறது. பிரித்தானிய 3.7 மடங்கும், ஐரோப்பிய ஒன்றியம் 2.7 மடங்கும் அவுஸ்திரேலியா 2.5 மடங்காகவும் தடுப்பூசிகளை முன்பதிவு செய்துள்ளன.

செல்வம் குவிவது போலவே, தடுப்பூசிகளும் ஒருசிலரிடம் குவிகின்றன. உலக மக்கள் அனைவரையும் சமத்துவமாக நோக்க மறுக்கும் இதே யோக்கியர்கள் தான், நாளை சமத்துவம், உரிமை, என்று பேசியபடி உள்நாட்டு விடயங்களில் மூக்கை நுழைப்பார்கள். அதற்காக, இங்கும் ஒரு கூட்டம் ஏங்கிக் கிடக்கும்.




# மர்ம காய்ச்சல் நால்வர் மரணம்

கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் உள்ள கிராமத்தில், மர்மக் காய்ச்சலால், அடுத்தடுத்து 4 முதியவர்கள் உயிரிழந்ததால், ஊர் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். இக்கிராமத்துக்கு வெளிநபர்கள் வர மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து, ஊர் நுழைவு வாயிலில், தடுப்புகளை வைத்து மறைத்துள்ளனர்.


திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மேல்மலைப் பகுதியிலுள்ள கிராமங்களில், கடந்த சில நாள்களாக, மர்மக் காய்ச்சலால் கிராம மக்கள் சிரமப்படுகின்றனர்.

மேலும், கொரோனா ஊரடங்கால் மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாத நிலையில், மேல் சிகிச்சைக்கு வழியின்றித் தவிப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூக்கால் கிராமத்தில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த இரு நாள்களில் மட்டும் 4 முதியவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

புதுடெல்லி

## 'பாபாவை கைது செய்க' பிரதமருக்கு கடிதம்



கொரோனா தடுப்பூசி குறித்து தவறாகவும், உண்மைக்கு மாறாகவும் பிரசாரம் செய்துவரும் யோகா குரு பாபா ராம்தேவ் மீது, தேசவிரோதச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து, கைது செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு இந்திய மருத்துவக் கூட்டமைப்பு கடிதம் எழுதி வலியுறுத்தியுள்ளது.

அலோபதி மருத்துவம் குறித்துத் தவறான தகவல்களையும் பிரசாரத்தையும் யோபா குரு பாபா ராம்தேவ் முன்னெடுத்ததால் இந்திய மருத்துவக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்தது. மத்திய அமைச்சர் ஹர்ஷவர்த்தன் கண்டித்ததைத் தொடர்ந்து, பாபா ராம்தேவ் தனது கருத்தைத் திரும்பப் பெற்று, வருத்தம் கோரினார்.

இந்நிலையில், இந்தச் சர்ச்சை முடிந்த சிலநாள்களுக்குள் பாபா ராம் தேவ் மீண்டும் பேசியுள்ளார். சமீபத்தில் பாபா ராம்தேவ் பேசிய வீடியோவில், " அலோபதி மருத்துவத்தாலும், தடுப்பூசியாலும் 10 ஆயிரம் மருத்துவர்கள், இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இந்த விவகாரத்தை இந்திய மருத்துவக் கூட்டமைப்பு பிரதமர் மோடியின் கவனத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது. தடுப்பூசி குறித்துத் தவறான பிரசாரத்தை செய்துவரும் பாபா ராம்தேவை உடனடியாக தேசவிரோதச் சட்டத்தின் நடவடிக்கை எடுங்கள் என வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளது.

சென்னை

## 'திசை திருப்பாதீர்'



'புகார் தந்தும் பாலியல் தொல்லை விவகாரத்தில், போதிய கவனம் செலுத்தாத கல்வி நிறுவனங்கள் மீதான நம்பிக்கை குலைகிறது. ஜாதி ரீதியில் பிரச்சினையை திசை திருப்ப வேண்டாம்' என, மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் விடுத்துள்ள அறிக்கை கவலை தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: 'மாணவியரிடம் ஆசிரியரே அத்துமீறிய, பத்மா சேஷாத்ரி பள்ளி விவகாரம், மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. முன்னரே புகார் அளித்தும், பள்ளி நிர்வாகம், இதில் போதிய கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு, கல்வி நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை குலைக்கிறது.

இதையடுத்து, மற்ற பள்ளிகளில் நிகழ்ந்த, நிகழும் பாலியல் துன்புறுத்தல் புகார், அடுத்தடுத்து வெளிவந்த வண்ணம் உள்ளன. இதற்காக, தனி குழுவை நியமித்து, விசாரிக்க வேண்டும். கண்ணை இமை காப்பது போல், நம் கண்மணிகளை காக்க வேண்டிய பொறுப்பில் உள்ளோம். 'ஒன்லைன்' வசதிகளை பிள்ளைகள் கையாளும்போது, பெற்றோர் கவனத்துடனும், பிள்ளைகளின் அச்சத்தை போக்கித் துணையாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு கமல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லி

## 'தடுப்பூசியில் மோடி விளம்பரம்'



கொரோனா தடுப்பூசிகளை குறித்த காலப்பகுதியில் வாங்காமல் இருந்த பிரதமர், தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழில் தனது படத்தை வைத்து விளம்பரம் தேடிக்கொள்கிறார் என, காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்திய அரசாங்கம் 2021ஆம் ஆண்டு ஜனவரியில் தான், வெறும் 1.6 கோடி தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்தது. ஜனவரி முதல் மார்ச் வரையில், 6.5 கோடி தடுப்பூசி மருந்துகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளது. ஆனால், இந்தியாவில் 3.5 கோடி பேருக்கு மட்டுமே தடுப்பூசி கிடைத்திருந்தது. தடுப்பூசிக்கு கடுமையான பற்றாக்குறை நிலவும் இதேவேளை, தடுப்பூசி செலுத்தப்படுவது நாளுக்குநாள் குறைந்து வருகிறது என்றார்.




## இந்தியாவுக்கு 5 கோடி பைஸர் தடுப்பூசி

கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒன்றாக, அமெரிக்காவின் பைஸர் மருந்து நிறுவனம், 5 கோடி டோஸ்களை தருகிறோமென இந்திய மத்திய அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாநிலங்கள் நேரடியாக வெளிநாடுகளில் இருந்து தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய மத்திய அரசாங்கம் அனுமதித்தது. ஆனால், பஞ்சாப் அரசாங்கத்துக்கும், டெல்லி அரசாங்கத்துக்கும் தடுப்பூசிகளை நேரடியாக விற்பனை செய்ய முடியாது என்று மாடர்னா மற்றும் பைஸர் நிறுவனம் தெரிவித்தது.

இந்திய அரசாங்கத்துடன் மட்டுமே நேரடியாக தடுப்பூசி விற்பனையை செய்ய முடியும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில் தடுப்பூசி விற்பனை குறித்து மத்திய மத்திய அரசாங்கத்துடன் பைஸர் நிறுவனம் ஆலோசனை நடத்தி வருகிறது.

பைஸர் நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் கடந்த இரு நாள்களுக்கு முன் வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியாவில் எங்கள் தடுப்பூசியை விற்பது தொடர்பாக, நாங்கள் மத்திய அரசாங்கத்துடன் ஆலோசித்து வருகிறோம். இந்தியாவில் விரைவில் பைஸர் நிறுவனத்தின் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும் என நம்புகிறோம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.




## மண்ணரிப்பால் வெளியான 'முதுமக்கள் தாழிகள்'

ஸ்ரீவைகுண்டம் அருகே வசவப்பபுரம் பரம்பு பகுதியில் மண்ணுக்குள் புதைந்திருந்த ஏராளமான முதுமக்கள் தாழிகள், பழங்காலப் பொருட்கள், மழையால் மண்ணரிப்பு ஏற்பட்டதில் வெளியில் வந்தன.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த அகழாய்வுப் பணிகள், ஊரடங்கு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த சில நா ள்களாகப் பெய்து வரும் மழையால் ஸ்ரீவைகுண்டம் வட்டத்துக்கு உட்பட்ட வசவப்பபுரம் கிராமம் பெரிய பரம்பு பகுதியில் மண்ணரிப்பு ஏற்பட்டது. இதில், மண்ணுக்குள் புதைந்திருந்த ஏராளமான முதுமக்கள் தாழிகள், மண்பாண்டங்கள் வெளியே தெரிகின்றன. தாழிகளுக்குள் விதவிதமான ஜாடிகள், இரும்பு ஆயுதங்கள், விளக்கு தூபம் உள்ளிட்ட பொருட்கள் காணப்படுகின்றன.

# நான் சிங்கிள் இல்லை



நடிகை லட்சுமி மேனன் 'கும்கி'திரைப்படத்தின் மூலம் ரசிகர்களிடையே பிரபலமானார். அதன்பிறகு சுந்தரபாண்டியன் படத்தின் மூலம் நல்ல அறிமுகத்தை பெற்றார். அவர் நடிப்பில் குட்டிப்புலி, பாண்டியநாடு, மஞ்சப்பை, ஜிகிர்தண்டா, கொம்பன், வேதாளம், மிருதன் ஆகிய திரைப்படங்கள் வெளியாகி வெற்றி பெற்றன.

நீண்ட இடைவெளிக்கு பிறகு விக்ரம் பிரபு நடிப்பில் வெளியான 'புலிக்குத்தி பாண்டி' திரைப்படத்தில் நடித்தார். இந்த நிலையில், சமூக வலைதளத்தில் அவ்வெப்போது தன்னுடைய புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களுடனும் பேசி வருகிறார் லஷ்மி மேனன் . இதன்போது, சமூக வலைத்தளத்தில் ரசிகர் ஒருவர் நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா என்று கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த லட்சுமி மேனன், ஆமாம் என்று கூறினார்.

அதேபோன்று மற்றொரு ரசிகர் கேட்ட கேள்விக்கு, நான் எப்போதுமே சிங்கிள் கிடையாது என்று தெரிவித்துள்ளார். இதையடுத்து யார் அந்த காதலர் என கேட்டு வருகின்றனர்.

## நிதி அகர்வால் அதிரடி முடிவு



ஈஸ்வரன், பூமி திரைப்படங்களில் நடித்த நிதி அகர்வால் தற்போது தெலுங்கில் பவன் கல்யாணுடன் ஹரி ஹர வீர மல்லு என்ற சரித்திர திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

தற்போது கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல நடிகர், நடிகைகள் இணையம் மூலம் உதவிகள் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் நிதி அகர்வால், கொரோனா நோயாளிகளுக்கு சேவை செய்வதற்காகவே டிஸ்டிரிப்யூட் லவ் என்ற பெயரில் ஒரு தொண்டு நிறுவனம் தொடங்கி உள்ளார்.

இதில் ஒரு குழுவை நியமித்து எந்தெந்த பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறது என்பதை அறிந்து உடனுக்குடன் இந்த நிறுவனத்தின் மூலம் உதவி செய்யப் இருக்கிறார் நிதி அகர்வால்.

## மொழி தடையில்லை



தமிழ், தெலுங்கு மொழிகளில் முன்னணி நடிகையான தமன்னா நடிப்பில் தற்போது நவம்பர் ஸ்டோரி என்னும் வெப் தொடர்வெளியாகி உள்ளது.

இந்தத் தொடர், அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது, தமன்னாவுடன் இதில் பசுபதி, ஜி.எம். குமார், அருள் தாஸ் மற்றும் விவேக் பிரசன்னா ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த தொடரின் வெற்றி குறித்து தமன்னா கூறுகையில், "நவம்பர் ஸ்டோரி' பார்வையாளர்களிடமிருந்து பெற்றுத்தந்த பாராட்டு ஊக்கமளிக்கிறது.

நல்ல கதைக்களத்துக்கு மொழி ஒரு தடை இல்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்றார்.




### தனுஷுடன் நடிக்கும் வாய்ப்பை

## 'மிஸ்' பண்ணிய காயத்ரி

தனுஷ் நடிப்பில் செல்வராகவன் இயக்கத்தில் உருவான 'புதுப்பேட்டை' திரைப்படம் வெளிவந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டதை அடுத்து தனுஷ் மற்றும் செல்வராகவன் ரசிகர்கள் சமூக வலைதளங்களில் கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகையும் நடன இயக்குநரும் பாஜக பிரபலமுமான காயத்ரி ரகுராம் 'புதுப்பேட்டை' திரைப்படத்தில்தான் நடிக்க இருந்ததாகவும் ஆனால் ஒரு சில பிரச்சனைகள் காரணமாக நடிக்க முடியவில்லை என்றும் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

புதுப்பேட்டை' திரைப்படத்தில் சினேகா நடித்த கேரக்டரில் முதலில் காயத்ரி ரகுராம் தான் நடிக்க ஒப்பந்தம் ஆனதாகவும் அதன் பின்னர் சில காரணங்களால் அந்த திரைப்படத்தில் இருந்து அவர் விலகி விட்டதாகவும் அதனை அடுத்து தான் சினேகா ஒப்பந்தம் ஆனதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இந்த பேட்டி தற்போது வைரலாகி வரும் நிலையில் 'புதுப்பேட்டை' திரைப்படத்தில் காயத்ரி ரகுராம் நடித்திருந்தால் எப்படி இருக்கும் என ரசிகர்கள் கற்பனை குதிரைகளை தட்டிவிட்டுள்ளனர்.



# கோடி ரூபாய் கொடுத்தாலும் முடியாது

தமிழ் சினிமாவில் சிறந்த கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வருபவர் கார்த்தி. இவர் நடிப்பில் கடைசியாக வெளியான சுல்தான் திரைப்படம் வசூல் ரீதியாக வெற்றிப்பெற்றது.

அண்மையில், முன்னணி நடிகர்கள் மாஸ் காட்டுவதற்காக புகை பிடிக்கும் காட்சிகளை திரைப்படங்களில் வைத்து வருகின்றனர். பல வருடங்களாக சினிமாவில் இருந்தாலும் வெறும் 20 படங்கள் மட்டுமே நடித்திருக்கும் கார்த்தி தன்னுடைய திரைப்படங்களில் பெரும்பாலும் புகைபிடிக்கும் காட்சிகளைத் தவிர்த்து வருகிறார். இது குறித்து கூறிய கார்த்தி, கோடி ரூபாய் கொடுத்தாலும் புகைப்பிடிக்கும் படி நடிக்க மாட்டேன் என்று கூறியுள்ளார்.

> **"பல வருடங்களாக சினிமாவில் இருந்தாலும் 20 படங்கள் மட்டுமே நடித்திருக்கும் கார்த்தி, திரைப்படங்களில் புகைபிடிக்கும் காட்சிகளைத் தவிர்த்து வருகிறார்**

நைஜீரியா

160 பேருடன் படகு மூழ்கியதில்

# 140 பேரை காணவில்லை




வட மேற்கு நைஜீரியாவில் கொள்ளளவுக்கு மீறி ஏறத்தாழ 160 பயணிகளைக் கொண்டிருந்த படகொன்று நைகர் ஆற்றில் மூழ்கிய நிலையில் ஏறத்தாழ 140 பயணிகளைக் காணவில்லை என நகஸ்கி மாவட்ட நிர்வாகத் தலைவரான அப்துல்லாஹி புஹாரி வரா தெரிவித்துள்ளார்.

மத்திய நைகர் மாநிலத்திலிருந்து வடமேற்கு கெபி மாநிலத்துக்கு சென்று கொண்டிருந்தபோதே பிளந்து நேற்று முன்தினம் மூழ்கியதாக புஹாரி வரா கூறியுள்ளார்.

மீட்பு நடவடிக்கையொன்று இடம்பெறுவதாகவும், ஆனால் 22 பேரே தப்பித்துள்ளதாகவும், ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வரா மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த படகில் 80 பயணிகளுக்கு மேல் ஏற்ற முடியாதென்பதுடன், படகில் தங்கச் சுரங்கமொன்றிலிருந்தான மண்ணும் ஏற்றப்பட்டிருந்ததாக வரா கூறியுள்ளார்.

## Zoom இல் கூடிய பக்தர்கள்



தம்மகாய விகாரையில் புத்தரின் பிறப்பு, ஞானோதயம், இறப்பின் வருடாந்தக் கொண்டாட்டமான வெசாக் தினத்தின்போது தாய்லாந்தின் பதும் தனி மாகாணத்தில் கொவிட்-19 பரம்பலுக்கு மத்தியில் பக்தர்கள் ஸூம் (Zoom) செயலியூடாக கூடியிருப்பதை திரைகள் காண்பிக்கின்றன.

ஐ. அமெரிக்கா

ரயில் திருத்தகத்தில்

## எண்மர் கொலை




ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள ரயில் திருத்தகமொன்றில் எட்டுப் பேரை சக பணியாளரொருவர் சுட்டுக் கொன்றுள்ளார். பின்னர் பொலிஸார் நெருங்கிய நிலையில் தனதுயிரையும் குறித்த பணியாளர் மாய்த்துள்ளார். சக பணியாளர்களைக் கொல்ல விரும்புவதை கூற விரும்புவதாக குறித்த பணியாளர் தனது முன்னாள் மனைவிக்கு கூறியதாக அவர் கூறியுள்ளார். குறித்த சம்பவத்துக்கு சற்று முன்னால் குறித்த பணியாளரின் வீட்டில் தீயொன்று பரவியுள்ளது.

ஈராக்

பயங்கரவாதத்துக்கெதிரான சட்டத்தின் கீழ்

## ஆயுதக்குழு தளபதி கைது



ஈராக்கின் பயங்கரவாதத்துக்கெதிரான சட்டத்தின் கீழ் சிரேஷ்ட ஆயுதக்குழு தளபதி குவாசிம் முஸ்லிஹை, அந்நாட்டு பாதுகாப்புப் படைகள் கைது செய்துள்ளதாக, அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலையில் கைது செய்யப்பட்ட முஸ்லிஹ், அவருக்கெதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகள் குறித்த இணைந்த விசாரணை செயற்குழுவால் விசாரிக்கப்படுவதாக இராணுவ அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஐக்கிய அமெரிக்க, ஏனைய சர்வதேசப் படைகளைக் கொண்டிருக்கின்ற ஐன் அல்-அசாட் விமானத் தளம் மீதான அண்மைய தாக்குதல்கள் உள்ளடங்கலாக சில தாக்குதல்களில் பங்கெடுத்ததற்காக முஸ்லிஹ் கைது செய்யப்பட்டதாக கைது குறித்து நேரடியாக அறிந்த இரண்டு பாதுகாப்புத் தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

மாலி

இராணுவத்தால் கைது செய்யப்பட்டதையடுத்து

## ஜனாதிபதி, பிரதமர் இராஜினாமா



மாலியின் இடைக்கால ஜனாதிபதி பஹ் என்டோவும், பிரதமர் மொக்டர் உவனேயும் இராஜினாமா செய்துள்ளதாக அந்நாட்டின் உப ஜனாதிபதி அஸ்ஸிமி கொய்டாவின் உதவியாளர் பபா சிஸே தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் மாலி இராணுவத்தால் ஜனாதிபதி என்டோவவும், பிரதமர் உவனேயும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதி, பிரதமரை விடுவிப்பதற்கான, புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான பேரம்பேசல்கள் இடம்பெறுவதாக சிஸே தெரிவித்துள்ளார்.

கொ.ஜ. குடியரசு

எரிமலை வெடிப்பையடுத்து

## 40 பேரைக் காணவில்லை

கிழக்கு கொங்கோ ஜனநாயகக் குடியரசில், எரிமலை வெடிப்பொன்றின் பின்னர் 40 பேரை இன்னும் காணவில்லையெனவும், 20,000க்கும் அதிகமானோர் வீடற்றவர்களாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எரிமலை வெடிப்பிலான சாம்பல் மண்டலத்தால் சுவாச நோய்கள் ஏற்படலாமென அறிக்கையொன்றில் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. இதேவேளை, வீடுகளிலிருந்து வெளியேறிய மக்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்களை இழந்ததாக குறித்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த எரிமலை வெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 32ஆக கடந்த செவ்வாய்க்கிழமை உயர்ந்திர்ருந்தது. இந்நிலையில், 200க்கும் மேற்பட்ட சிறிய, மத்தியதர புவியதிர்ச்சிகளால் கொங்கோ தலைநகர் கோமாவிலுள்ள கட்டடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தது.



பங்களாதேஷுக்கு எதிரான 3ஆவது ODI இன்று:

# ஆறுதல் வெற்றி பெறுமா இலங்கை?



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது டாக்காவில் இன்று மதியம் 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் தோற்று தொடரை இழந்துள்ள இலங்கை, ஆறுதல் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் களமிறங்குகின்றது.

அந்தவகையில், இலங்கையின் பந்துவீச்சானது குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ளத்தக்கவாறு மோசமாக இல்லாத நிலையில் துடுப்பாட்டமானது அதல பாதாளத்தில் உள்ளது.

ஆக, குழாமில் வெளியே இருக்கின்ற நிரோஷன் டிக்வெல்ல யாரையைவது பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், அணித்தலைவர் குசல் பெரேரா, உப அணித்தலைவர் குசல் மென்டிஸ் ஆகியோரும் சொல்லிக் கொள்ளும்படியான பெறுபேறுகளை விரைவில் வெளிப்படுத்த வேண்டிய அழுத்தத்தில் காணப்படுகின்றனர்.

இதேவேளை, இலங்கைக்கு இரண்டு போட்டிகளிலும் ஆபாத்தாந்தனவாக இருக்கின்ற முஷ்பிக்கூர் ரஹீமின் விக்கெட்டையும் விரைவில் கைப்பற்றுவது குறித்து இலங்கை சிந்தித்தாக வேண்டும்.

மறுப்பக்கமாக பங்களாதேஷில் லிட்டன் தாஸ் போன்றோர் தொடர்ச்சியாக பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டிய அழுத்தத்தில் உள்ளனர். தவிர, குழாமுக்கு வெளியேயுள்ள மஹெடி ஹஸன், சௌமியா சர்கார் ஆகியோருக்கு இப்போட்டியில் வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

## ஷிரான் பெர்ணான்டோவுக்கு கொவிட்-19 இல்லை

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது சுற்று ஆர்.டி-பி.சி.ஆர் சோதனையின்போது இலங்கையின் வேகப்பந்துவீச்சாளர் ஷிரான் பெர்ணான்டோவுக்கு கொவிட்-19 தொற்று இல்லையெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷின் அணி அதிகாரியொருவரான ரபீட் இமாம் உறுதிப்படுத்தியுள்ளார்.

எவ்வாறெனினும், நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற பயிற்சியில் ஷிரான் பெர்ணான்டோ கலந்து கொண்டிருக்கவில்லை.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கு முன்பதாக, ஷிரான் பெர்ணான்டோக்கு கொவிட்-19 தொற்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.



ODI பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில்

## இரண்டாமிடத்தில் மெஹிடி ஹஸன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான (ODI) பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு, பங்களாதேஷின் சுழற்பந்துவீச்சாளர் மெஹிடி ஹஸன் மிராஸ் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான முதலிரண்டு போட்டிகளிலும் ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே, ஐந்தாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை மெஹிடி அடைந்துள்ளார்.

இதேவேளை, குறித்த போட்டிகள் இரண்டிலும் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் வேகப்பந்துவீச்சாளர் முஸ்தபிசூர் ரஹ்மான், 17ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ட்ரெண்ட் போல்ட், 2. மெஹிடி ஹஸன் மிராஸ், 3. முஜீப் உர் ரஹ்மான், 4. மற் ஹென்றி, 5. ஜஸ்பிரிட் பும்ரா, 6. ககிஸோ றபாடா, 7. கிறிஸ் வோக்ஸ், 8. ஜொஷ் ஹேசில்வூட், 9. முஸ்தபிசூர் ரஹ்மான், 10. பற் கமின்ஸ்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. விராட் கோலி, 3. ரோஹித் ஷர்மா, 4. றொஸ் டெய்லர், 5. ஆரோன் பின்ஞ், 6. ஜொனி பெயார்ஸ்டோ, 7. பக்கர் ஸமன், பொஸ்வா டு பிளிஸிஸ், 9. டேவிட் வோணர், ஷே ஹோப்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. பென் ஸ்டோக்ஸ், 3. மொஹமட் நபி, 4. கிறிஸ் வோக்ஸ், 5. ரஷீட் கான்.



## இன்டர் மிலனிலிருந்து விலகிய கொன்டே

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் முகாமையாளர் பதவியிலிருந்து அந்தோனியோ கொன்டே விலகியுள்ளார்.

இரண்டாண்டுகள் பதவியிலிருந்த கொன்டே, தனது ஒப்பந்தத்தில் இன்னும் ஓராண்டைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆகியோருடன் கொன்டேயுடன் இணைத்து அண்மையில் கருத்துகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்டரிலிருந்து கொன்டே விலகும் முடிவானது இன்டராலும், கொன்டேயாலும் எடுக்கப்பட்டதாக இன்டர் தெரிவித்துள்ளது.

யூரோப்பா லீக்: பெனால்டியில்

## யுனைட்டெட்டை வென்று சம்பியனானது வீறியல்




ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான யூரோப்பா லீக் தொடரில், ஸ்பானிய லா லிகா கழகமான வீறியல் சம்பியனானது.

போலந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் பெனால்டியில் வென்றே வீறியல் சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் வழமையான நேர முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி முடிவடைந்ததுடன், மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில், பெனால்டியில் 11-10 என்ற ரீதியிலேயே வீறியல் வென்று சம்பியனானது.

வீறியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜெரார்ட் மொரேனோவும், யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை எடின்சன் கவானியும் பெற்றிருந்தனர்.

யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் டேவிட் டி கியாவின் பெனால்டியே தடுக்கப்பட்ட நிலையில், போட்டியில் பங்கேற்ற மிகுதி வீரர்கள் அனைவரும் பெனால்டியை உட்செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 26 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.